## நன்றிப்பாடல்

வெள்ளிச் சுரங்களின் அலைகளிலே
துள்ளி வருகின்ற சந்தங்களே
உள்ளங்கனிந்த என் நன்றியினைச்
சொல்லிப் பாடுங்களே (2)
எந்தன் தேவனுக்கே - 2

கருவினில் என்னை அறிந்தவன்
கண்மணி போல வளர்த்தவன்
அறுவடை மிகுந்த பணியிலே அடியேன்
என்னை அழைத்தவன்
அருகில் இருந்து ஆற்றல் பொழிந்து
நிறையானந்தம் தருபவன்
அந்த நல்ல தேவனுக்கே என் நன்றியைக்
கூறுங்களே

கொடுப்பதில் இன்பம் வைத்தவன்
தன்னையே உண்ணக் கொடுத்தவன்
படிப்பினைகள் சொல்லியவன்
சொன்னபடியே வாழ்ந்தவன்
இடுக்கண்ணுற்று வீழும்போது
எனக்காய் உயிர் கொடுத்தவன்
அந்த நல்ல தேவனுக்கே என் நன்றியைக்
கூறங்களே

## மரியன்னைப்பாடல்

எங்கள் அம்மா என்று உன்னை
அழைக்கையிலே

நெஞ்சில் ஆறுதல் பிறக்குதம்மா

உந்தன் அன்பால் எம்மை
அணைக்கையிலே

எங்கள் இதயம் மகிழுதம்மா (2) ஓ மரியே
வாழ்க - 4

என் நெஞ்சில் நிலையாக கோயில்
கொண்டாய்

எப்போதும் வசந்தமாய் வாசல் வந்தாய்
(2)

விடிவெள்ளியாக நீ வரும் போது
விடியாத இரவுகள் ஏதம்மா

முடிவொன்று சொல்ல நீ உள்ள போது

முடியாத முடிவுகள் ஏதம்மா

உனைப் பாடவே நான் வாழ்கின்றேன்

செபமாலைத் தாய்மரியே (எங்கள்) -2 ஓ
மரியே வாழ்க - 4

எல்லோர்க்கும் தாயாக நீயே வந்தாய்

இதயத்தில் ஆனந்தம் கோடி தந்தாய் (2)

வளமான வாழ்வு நீ தரும் போது

வணங்காத உயிர்களும் ஏதம்மா

கனிவான உந்தன் கருணைக்கு உலகில்

ஈடிணையேதும் இல்லையம்மா

மனம் உருகவே உனைப் பாடுவேன்

செபமாலைத் தாய்மரியே (எங்கள்) -2 ஓ
மரியே வாழ்க – 4

---

**இந்த பாடல்களின் ஒலி வடிவத்தை**
www.tamilcatholicnews.com **இதில் ப்திவிறக்கம்**
**செய்யலாம்**

---

# மாதாந்த திருப்பலிப் பாடல்கள்

**யூலை 2021**

## வருகைப்பாடல்

இதயங்கள் மலரட்டுமே நம்மில்
இன்னிசை முழங்கட்டுமே (2)
இறையருள் வளரட்டுமே அது இகம்
எல்லாம் பரவட்டுமே

அண்ணலே இங்கு நமை அழைத்தார் - இம்
மண்ணிலே பொங்கும் வாழ்வளித்தார் (2)
வரையில்லா வரங்களை நமக்களித்தார்
-2 தம்
கரையில்லாக் கருணையால் நமை
மீட்டார்

அன்பிலே மலர்கின்ற விசுவாசம் - அது
குன்றின்மேல் ஒளிர்கின்ற
திருவிளக்காம் (2)
நீதியும் உண்மையும் அதன் சுடராம் - 2
அவை
தீதில்லா வாழ்வுக்குச் சான்றுகளாம்

3. இருளெல்லாம் அழித்திட ஒளி
கொணர்ந்தார் - நெஞ்சில்
அருள் வளம் செழித்திட
நமையழைத்தார் (2)
திருமகன் அன்பினைச் சுவைத்திடும்
நாம் - 2 அதை
தரணியர் மகிழ்ந்திடப் பகிர்ந்திடுவோம்

**தியானப்பாடல்கள்**

என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய்
உள்ளோருடன்
என்றும் இருக்கின்றார் (2)

கடவுளே உமது பெயரின் வல்லமையால்
என்னைக் காப்பாற்றும்
உமது மேன்மைமிகு ஆற்றலினால்
எனது நேர்மையை நிலைநாட்டும் (2)
கடவுளே விண்ணப்பத்தைக்
கேட்டருளும்
எனக்குச் செவிசாயும் (2)

இதோ கடவுள் எனக்கு என்றும்
துணைவராய் இருக்கின்றார்
எனது வாழ்வுக்கு ஆதரவாய்
உள்ளோருடன் இருக்கின்றார் (2)
ஆர்வத்தோடு உமக்கு பலிசெலுத்துவேன்
நன்றி செலுத்திடுவேன் (

**காணிக்கைப் பாடல்**

வந்தேன் உந்தன் இல்லம் இறைவா - இன்

தந்தேன் எந்தன் உள்ளம் தலைவா
உள்ளதை எல்லாம் எடுத்துவந்தேன் -
அதில்
நல்லவை அனைத்தையும் உவந்து
தந்தேன்
எனை ஏற்றிடுவாய் இறைவா உந்தன்
கருவியாய் மாற்றிடுவாய்

கோதுமை மணியென மடிந்து பலன்
தரவே
எரியும் மெழுகென உருகி ஒளி தரவே (2)
என்னையே முழுவதும் தருகின்றேன் -
எனை

உரிமைகள் கடமைகள் இழந்து
தவித்தவரே
நலிவுறும் வாழ்வினில் வளமை
நிலைத்திடவே (2)
என்னையே முழுவதும் தருகின்றேன் -
எனை

**திருவிருந்துப்பாடல்**

வானக அப்பமே வரவேண்டும்
இவ்வையக உணவே வரவேண்டும்
விண்ணக உணவைத் தரவேண்டும் நான்
உன்னுடன் வாழும் வரம் வேண்டும்

உள்ளத்தில் உனக்குக் கோயில்
செய்தேன் அதில்
உயர்ந்த கோபுரம் கட்டி வைத்தேன் (2)
அன்பெனும் விளக்கை ஏற்றி வைத்தேன்
-2 அங்கு
வாழ்ந்திட மன்னவா வரவேண்டும் - 3

பொன்னும் பொருளும் நிலமெல்லாம்
பெரும்
பெயரும் சீரும் சிறப்பெல்லாம் (2)
உன்னோடு உறவு இல்லையெனில் -2
அதைப்
பெற்றாலும் எனக்கு பயன் என்ன - 3